# அவரே நமது கிருஷ்ணர்!

**வெளியிடுவோர் :**

நஸாரத் நஷ்ரோ இஷாஅத்

காதியான், பஞ்சாப்.

Tamil Translation of the Booklet
Wahi Hamara Krishan
(Aware namadhu Kirushnar)

| | | |
|---|---|---|
| Book Name | : | Aware Namadhu Kirushnar |
| Written by | : | Hadhrat Muslih Ma'ud(Razi) |
| Translated by | : | Moulavi A. Abdur Rahman Tahir |
| First Edition | : | 2019 |
| Copies | : | 1000 |
| Published by | : | Nazarat Nashr-o-Isha'at<br>Sadr Anjuman Ahmadiyya, Qadian<br>Gurdaspur, Punjab-143 516. |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press,<br>Qadian |
| Toll Free No | : | 1800 3010 2131 |
| Tamil Toll Free No | : | 1800 425 40000 |

# அவரே நமது கிருஷ்ணர்!

அன்பிற்குரிய இந்து சகோதரர்களே! நாம் ஒரு தேசத்தில் வசிக்கின்றோம். பொதுவாக ஒரே மொழியைத் தான் பேசுகின்றோம். ஒளி வழங்கக்கூடிய இறைவனின் சூரியன் நம் அனைவருக்கும் ஒரே ஒளியைத்தான் வழுங்குகிறது. அவனது அழகிய நிலவு நம் அனைவரிடத்திலும் எந்த வேற்றுமையும் பாராட்டாமல் அன்பின் கண் கொண்டே பார்க்கிறது. இரவின் இருள் முழு உலகிலும் சூழ்ந்துவிடும் போதும் நமது புலன்கள் நம்மை விட்டு விலகிவிடும் போதும் பகல் ஏற்பட்ட களைப்பால் உடல் சோர்ந்து படுக்கையில் நாம் விழுந்து விடும்போது இறைவனின் வானவர்கள் தமது அன்பெனும் இறக்கையால் நம் அனைவரின் மீதும் தனது நிழலைப் பரப்புகின்றனர். இந்து முஸ்ம் என்ற எந்த வேற்றுமையும் அவர்கள் பாராட்டுவதில்லை. இமயமலையின் உச்சியில் இருக்கும் பனிக்கட்டி சூரிய வெப்பத்தால் உருகும்போதும் நதிகளின் தண்ணீரை அதன் கரைகள்வரை சென்று சேர்க்கும்போதும் அழகிய கங்கையும் உள்ளத்தைக் கவரும் யமுனா நதியும் துள்ளிக் குதிக்கும் தண்ணீரை தாகத்தால் வறண்ட போன நிலத்திற்கு கொண்டு சேர்க்கிறது. அது ஒருபோதும் முஸ்ம் யார்? ஹிந்து யார்? என்று பார்ப்பதில்லை. குப்பைகளை எரித்து சாம்பலாக்கும்

நெருப்பும் (பசியால் உருவாகும்) மனித நரகத்தை தணிக்கின்ற பணி செய்கின்றது. இந்துக்களின் சாம்பாரையும் முஸ்ம்களின் குழம்பையும் சமைப்பதில் அது எந்த வித்தியாசத்தையும் காட்டியதில்லை. இறைவனின் அருட்கொடைகள் நம் அனைவரிடமும் எந்த வித்தியாசத்தையும் காட்டாதபோது அவன் மீது நாம் கொள்ளும் அன்பு ஏன் வித்தியாசம் கொண்டதாக இருக்க வேண்டும்? மாற்றாந்தந்தை மற்றும் உண்மையான தந்தைக்கிடையிலான பாசத்தில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால், தனது தந்தையின் மீதான பாசத்தில் பிள்ளைகள் ஒருபோதும் வித்தியாசம் காட்டுவதில்லை. அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். ஆனால் தமது தாய் மற்றும் தந்தையின் மீதான அன்பில் ஒருவர் மற்றவரை முந்துவதற்கு முயற்சி செய்வர்.

அவ்வாறிருக்க, நாமோ நமக்கிடையிலான சண்டையில் நமது இறைவனை மறந்திட நமக்கு என்ன நேரிட்டது? அவன் நமது பாவங்களைக் கண்ட பின்னரும் நம்மிடம் எந்த வித்தியாசமும் காட்டவில்லை என்பதைக் கூட நாம் கருத்தில் கொள்வதில்லை. அவனது அருட்கொடைகளைக் கண்ட பின்னரும் நாம் ஏன் அவனிடம் வேற்றுமை பாராட்ட வேண்டும்? முட்டாள் பிள்ளைகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும்போது

தாயின் குரல் கேட்டு ஒருவர் மற்றவரின் கழுத்தை விட்டுவிட்டு தாயின் பக்கம் ஓடோடிவிடுவார்கள். சுதந்திரத்தை இயல்பில் கொண்ட காட்டுப்புறா கூட இரை போடுபவரின் குரல் கேட்டு தமது சுதந்திரத்தை மறந்து விடுகிறது. குறுகிய மற்றும் இருளான இடத்தில் தனது சுதந்திரத்தை தியாகம் செய்து விடுகிறது. ஏனெனில் இரை போடுபவரின் அழைப்பை அதனால் நிராகரிக்க முடியாது. அவ்வாறிருக்க அன்பிற்குரிய இந்து சகோதரர்களே! உங்களின் பரமேஸ்வரன் முழு உலகையும் தன் பக்கம் ஒன்று கூட்டுவதற்காக எழுப்பிய குரன் பக்கம் நீங்கள் ஏன் கவனம் செலுத்துவதில்லை. அந்தக் குரல் ஒரு முஸ்-மின் வாயில் இருந்து வெளிப்பட்டதால், நீங்கள் அதற்கு செவிமடுப்பதில்லையா? இறைவனின் எந்தப் பொருளும் எல்லைக்குட்பட்டது இல்லை என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்களா? இந்து, முஸ்ம், கிறிஸ்துவர் ஆகிய அனைத்துப் பெயர்களும் அடியார்களின் பெயர்களாகும். இறைவன் ஒருவரைத் தேர்ந்தெடுத்துவிடும்பொழுது அவர் சமுதாயங்களின் பந்தங்களிருந்து விடுதலையாகி விடுகின்றார். அவர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்குரியவராக மட்டும் இருப்பதில்லை. எல்லா சமுதாயமும் அவருக்குரியதாகிவிடுகிறது. அவர் அனைவருக்கும் உரியவராகி விடுவார்.

# அவரே நமது கிருஷ்ணர்!

அன்பிற்குரிய இந்து சகோதரர்களே! அதேபோன்று இக்காலத்தின் அவதாரப் புருஷர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டுமானவர் அல்லர். அவர் மஹ்தியுமாவார். ஏனென்றால் முஸ்ம்களின் இரட்சிப்பிற்கான தூதுச் செய்தியை அவர் கொண்டு வந்துள்ளார். அவர் ஈஸாவும் ஆவார். ஏனென்றால், கிறிஸ்துவர்களின் நேர்வழிக்குரிய விஷயங்களை அவர் கொண்டு வந்துள்ளார். அவர் கல்கி அவதாரமும் ஆவார். ஏனெனில், அவர் உங்களுக்காக–ஆம்–இந்து சகோதரர்களே! உங்களுக்காக இறைவனின் நேசமெனும் ஆடையை அன்பளிப்பாகக் கொண்டு வந்துள்ளார்.

நீங்கள் பழைய சான்றோர்களின் சந்ததிகள் ஆவீர்கள். எங்களின் மூதாதையர்கள் மிகவும் பழைமையான நாகரீகத்தைக் கொண்டவர்கள் என நீங்கள் பெருமை கொள்வது சரிதான். உங்களின் வரலாறு இதற்கு முன்னர் ஏற்றுக் கொள்ளாத ஒரு தத்துவத்தை நீங்கள் எடுத்து வைக்கின்றீர்கள். நீங்கள் அந்த முந்தைய உடல்களை பரம்பொருளில் இருந்து தோன்றும் எல்லாவற்றையும் விட மிகவும் பழமையானதும், தொன்மையானதுமான அந்த முந்தைய ஆன்மாக்களிருந்து வெறுமைப்படுத்தி விடுவீர்களா? பண்டைய விஷயங்களில் உயிரோட்டமிருக்கும் வரைதான் அது

கண்ணியத்திற்குரியதாக இருக்கும். உங்களது தாயும், தந்தையும் எந்த அளவிற்கு முதுமை அடைவார்களோ அந்த அளவிற்கு அவர்களை நீங்கள் மிகவும் கண்ணியப்படுத்துவீர்கள். ஆனால், அவர்கள் மரணித்துவிடும்போது அவர்களை பாடையில் கிடத்தி எரித்துவிடுகின்றீர்கள். எனவே, பண்டைய விஷயங்கள் கண்ணியத்திற்குரியதுதான். ஆனால், அதில் உயிர் இருக்கும்வரை மட்டுமே. அவ்வாறிருக்க நீங்கள் உங்களுடைய பண்டைய மற்றும் கண்ணியத்திற்குரிய விஷயங்களில் உயிரோட்டத்தை ஏற்படுத்த நீங்கள் ஏன் முயல்வதில்லை?

எவர்களுக்கு இறைவன் ஒருமுறை கண்ணியமளிக்கின்றானோ அவர்களுடன் நிரந்தரமாக தொடர்பு வைக்கின்றான். இது இறைவனின் சட்டமாகும். அவர்கள் அவன்பக்கம் முகம் திருப்பி நன்மையின் ஆன்மாவை பெற்றுக்கொண்டால் பின்னர் அவன் அவர்களுக்கு மற்றவர்களை விட அதிகமாக கண்ணியமளிக்கின்றான். எனவே பழைய நாகரீகமும், பண்டைய தத்துவமும் உங்களுக்கு பரம்பரைச் சொத்தாக கிடைத்திருக்கிறதென்றால் அதனை இறைவனின் ஆன்மாவைக் கொண்டு உயிரூட்டுங்கள். ஏனென்றால், அந்நிலையில் அது

தற்கால தேவைக்கேற்ப வடிவம் பெற்று உலகிற்கு நன்மை பயக்க முடியும்.

அன்பிற்குரிய சகோதரர்களே! உயிருள்ளவற்றிற்கும், மரணித்தவற்றிற்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் உயிருள்ளது காலத்திற்கேற்ப முன்னேற்றமடைகின்றது. இதுவேயாகும். மரணித்ததோ ஒரே நிலையிலேயே இருக்கும். இறுதியில் அழுகிப் போய்விடும். உங்களின் கவனக்குறைவினால் உங்களின் கலாச்சாரம் மற்றும் உங்களின் மார்க்கத்தின் மீதும் காலம் தனது தாக்கத்தை ஏற்படுத்தத் துவங்கிவிட்டது என்பதை நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? பரம்பொருளிற்கு எதிராக எத்தனை தேவி தேவதைகள் உங்களிடம் உருவாகியுள்ளார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஸ்ரீகிருஷ்ணரும், ஸ்ரீஇராமரும் ஒரு சிலையின் முன்னால் குனிந்து வணங்கியிருந்தார்களா என்பதை உங்களின் வேதத்தை எடுத்துப்பாருங்கள். அவர்கள் ஏதாவதொரு சிலையின் நெற்றியில் திலகமிட சென்றார்களா என்றும் பாருங்கள். அவர்கள் சிவன் மற்றும் பார்வதிக்கு முன்னால் கரம் கூப்பி நின்றார்களா? அவ்வாறிருக்க, பரம்பொருளிடமிருந்து விலகிச் சென்ற நிலையும் அந்நியர்களின் முன்னால் சிரம்பணிவதற்கான எண்ணமும் எங்கிருந்து

உங்களுக்கு வந்தது?

எல்லோரையும் விட நேசத்திற்குரிய அவன்மீதான நேசம் உங்களுக்கு ஏன் தணிந்து போனது? முதலாளிக்கு உரிய இடம் (அந்தஸ்து) வேலைக்காரனுக்கு ஏன் வழங்கப்பட்டது? இதற்கும் சில காரணங்கள் இருக்கத்தானே செய்யும். ஸ்ரீகிருஷ்ணரும், ஸ்ரீராமரும் செய்யாத பணியை நீங்கள் எப்படிச் செய்யத் தொடங்கினீர்கள்? எந்த வழியில் புனித அவதார புருஷர்கள் நடக்கவில்லையோ அந்தப் பாதையில் நீங்கள் ஏன் நடக்க ஆரம்பித்தீர்கள்? அதற்கான காரணம், வாழ்வை வழங்கக்கூடிய புத்தம் புது இறைக்கூற்றுகளிருந்து நீங்கள் உங்கள் காதுகளை அடைத்துக் கொண்டீர்கள். பண்டைய உடல்களை பேணிப் பாதுகாக்கின்றீர்கள். ஆனால், அதிருந்து ஆன்மாவை வெளியேற விட்டுவிட்டீர்கள் என்பது மட்டுமேயாகும். ரோசாப்பூ, கிளையில் இருக்கும்வரை அது எவ்வளவு நறுமணம் மிக்கதாக இருக்கின்றது! அது எத்துணை புத்தம் புதியதாக இருக்கிறது!! அது எவ்வளவு மென்மையானதாக இருக்கின்றது!!! ஆனால், மக்கள் அதனை பறித்து நெஞ்சிலோ, தலையிலோ சூட்டிக் கொண்டால் சிறிது நேரத்திலேயே அது மிகவும் வறண்டு காய்ந்து போய்விடுகின்றது. அதன் நறுமணமும் மாய்ந்து விடுகின்றது.

இதற்கான காரணம், அதன் பசுமைக்குக் காரணமாக இருந்த வாழ்வளிக்கும் செடியின் தொடர்பிருந்து அது பிரிக்கப்படுகிறது என்பதைத் தவிர்த்து வேறு என்னவாக இருக்க முடியும்? அதே போன்று, அன்பிற்குரிய சகோதரர்களே! தத்துவமும், மார்க்கமும் நல்ல விஷயங்கள்தான். ஆயினும், பரம்பொருள் என்று நாம் கூறும் வாழ்வளிக்கும் மரத்துடன் அதன் தொடர்பு இணைந்திருக்கும் வரைதான் அதன் அனைத்து அழகும் எஞ்சியிருக்கும். அந்தப்பூவை அதிருந்துப் பறித்து விட்டால் அதன் அழகும் மண்ணோடு கலந்து விடும். அந்நிலையில் காகிதத்தாலோ, துணியாலோ தயாரிக்கப்பட்ட பூவைப் போன்ற அழகு கூட அந்த அசல் பூவிற்கு இருக்காது.

எனவே, சகோதரர்களே! ஆன்மீக வாழ்க்கைத் தொடர்பாக உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை கூட அந்தத் தொடர்பு முறிந்துபோனதின் விளைவேயாகும். ஶ்ரீகிருஷ்ணர் மற்றும் ஶ்ரீஇராமச்சந்திரரைப் போன்று அவர்களுக்குப் பிறகு தோன்றிய மக்கள் பரம்பொருளுடன் தொடர்பு வைத்திருந்தால் இறைவனின் உயர் சன்னிதானத்தை விட்டு விலகி புனித ரிஷிகளின் சந்ததிகள், சிலைகள் மற்றும் தேவதைகள் முன் சென்று குனிந்து வணங்க

ஆரம்பித்துவிட்ட இந்த நிலைமை ஒருபோதும் வந்திருக்காது. எந்த நெற்றியை இறைவன் முத்தமிடுவதற்காக படைத்தானோ அதனை அவர்கள் தன்னிலும் கீழான பொருட்களின் முன்னால் குனிய வைப்பது எவ்வளவு வேதனைக்குரிய விஷயமாகும். உயர்நோக்குப் பார்வையுடன் பார்ப்பதற்காக படைக்கப்பட்ட கண்கள் பாதாளத்தின் பக்கம் தாழ்ந்து கிடக்கின்றது. ஏன் அப்படி? இதைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு வழியில்லை என்பதனாலா? இல்லை! இல்லை!! அப்படி ஒருபோதும் இருக்காது!! கிருஷ்ணர் மற்றும் இராமரின் சந்ததிகளையும் சேவகர்களையும் இறைவன் என்றென்றைக்கும் விட்டுவிடுவானா? ஏனென்றால் இந்துக்களின் முன்னேற்றம் மற்றும் சீர்திருத்தத்திற்காக அவன் கல்கி அவதாரத்தைத் தோன்றும்படி செய்துவிட்டான். அவர் மிகவும் பொருத்தமாக இக்காலத்தில் தோன்றியுள்ளார். இக்காலத்தைப்பற்றி ஸ்ரீகிருஷ்ணரும் முன்னரே அறிவித்துள்ளார். அவர் இறைவனின் புத்தம் புதிய அடையாளங்கள் மூலம் உயிருள்ளவன் மற்றும் ஆற்றல் மிக்கவன் என்பதற்கான ஆதாரத்தை உலகிற்கு வழங்கியுள்ளார். அது எப்படிப்பட்ட ஆதாரம் என்றால் அதனை எந்த மனிதராலும் நிராகரிக்க முடியாது. இனி, பரம்பொருளை நேசிக்க விரும்புகின்ற ஒவ்வொருவரும் அவர் மூலமாக ஈஸ்வரனை சந்திக்கலாம். பண்டைய ரிஷிகள், முனிவர்கள்

பெற்றுவந்த அருட்கொடைகளை அவரும் பெறலாம். ஏனென்றால், ஒருவருக்குக் கொடுத்துவிட்டு இன்னொருவருக்கு கொடுக்காமல் இருப்பதற்கு இறைவன் ஒன்றும் கருமியல்லன். அல்லது முன்னர் கொடுத்து வந்ததை இப்போது கொடுக்காமல் இருப்பதற்கு இறைவனின் கருவூலம் ஒன்றும் எல்லைக்குட்பட்டதல்ல.

அந்த கல்கி அவதாரத்தின் பெயர் மிர்ஸா குலாம் அஹ்மத் ஆகும். அவர் குர்தாஸ்பூர் மாவட்டம், காதியான் எனும் ஊரில் தோன்றியுள்ளார்கள். இறைவன் அவரது கரங்களின் மூலம் ஆயிரக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். மேலும், அவர் மூலமாக மீண்டும் உலகை நீதியால் நிரப்ப அவன் விரும்புகின்றான். அவர் மீது நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு இறைவன் மாபெரும் ஒளியை வழங்குகின்றான். அவர்களின் பிரார்த்தனைகளைக் கேட்கின்றான். அவர்களின் பரிந்துரைகளை ஏற்று மக்களின் துன்பங்களை அகற்றுகின்றான். மேலும், கண்ணியம் வழங்குகின்றான். அன்னாரது போதனையைப் படித்து நீங்களும் ஒளிபெற வேண்டும். இதில் உங்களுக்கு ஏதாவது ஐயம் இருக்குமென்றால் இறைவனிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்யுங்கள்.

**“இறைவா! உன்புறமிருந்து தோன்றியதாகவும், தானே கல்கி அவதாரம் என்றும் வாதிடும் இந்த நபர் தனது வாதத்தில் உண்மையாளர் என்றால் அவரை ஏற்றுக் கொள்ளும் பாக்கியத்தை நீ எங்களுக்கு வழங்குவாயாக! மேலும் அவர் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் எங்களது நெஞ்சங்களைத் திறப்பாயாக!”**

இவ்வாறு நீங்கள் பிரார்த்தனைச் செய்து பாருங்கள். இறைவன் நிச்சயமாக, மறைவான அடையாளங்கள் மூலம் அவரது உண்மைத்துவத்தின் மீது உங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவான். உண்மை வெளிப்பட்ட பிறகு, அவரது வாதத்தின் மீது நம்பிக்கை கொண்டு உங்களைப் படைத்த மற்றும் உங்களின் எஜமானனாகிய இறைவனை நீங்கள் சமாதானம் செய்து விடுவீர்கள் என வாக்குறுதி வழங்கினால் உண்மையான உள்ளத்துடன் என்பக்கம் முகம் திருப்புங்கள். மேலும் உங்களது கஷ்டங்களுக்காக பிரார்த்தனைச் செய்ய என்னிடம் கூறுங்கள். அல்லாஹ், உங்களது அனைத்து கஷ்டங்களையும் அகற்றி விடுவான். விருப்பங்களையும் நிறைவேற்றித் தருவான். ஆனால், ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் ஸ்ரீஇராமச்சந்தர்

காலத்தில் என்ன வழிமுறை இருந்ததோ அதே வழிமுறையை நீங்கள் கையாள வேண்டும். பின்னர், உலக நேசத்தை விட்டுவிட்டு அவருடன் தொடர்பை உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். இதுவும் அதற்கான நிபந்தனையாகும். அவரது குரலை உங்களது நண்பர்கள் மற்றும் அன்பர்கள் வரை கொண்டு சேர்க்க வேண்டும். அல்லாஹ்வின் மீதான அன்பை ஏற்படுத்துவதற்கு அவர் என்ன திட்டங்களைக் கூறியுள்ளாரோ அதன் வழி நடந்து இறைவனின் உண்மையான நேசராகவும், தூய தொண்டராகவும் நீங்கள் ஆகிவிடுங்கள்.

**அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக!**

எளியவன்
மிர்ஸா மஹ்மூத் அஹ்மது
( தலைவர், அஹ்மதிய்யா ஜமாஅத் )
காதியான், குர்தாஸ்பூர் மாவட்டம்.
அல்ஃபஸ்ல் – 1936, 2, ஏப்ரல் 1936

* * * * * * *

## நம் கிருஷ்ணர் வந்துவிட்டார்!

* * * * * * *